


யாழ்/ வண்ணை வட கிழக்கு கலட்டி
இல: 30, சீனியர் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்.இராசா பொன்குமார்


அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "பொற்சரிதம்"

15.06.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்/ வண்ணை வட கிழக்கு கலட்டி
இல: 30, சீனியர் ஒழுங்கையை பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்.இராசா பொன்குமார்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## "பொற்சரிதம்"

15.06.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத் தலைவன்
எம்மை நல்வழி நடத்தி
அன்போடு அறிவுரை தந்த
எம் அன்புத் தந்தை
தேனிலும் இனிய பாசத்தைக் காட்டி
தோளிலே தாங்கி வளர்த்தவர்
இப்பூவுலகில் எமக்காக
ஓயாமல் உழைத்த உன்னதம்
தேடினாலும் கிடைக்காத
அப்பா என்ற சொந்தம்
நல்ல கணவனாய் தந்தையாய்
பாசமிகு பேரனாய்
வாழ்ந்த எம் குடும்ப தலைவனுக்கு
பொற்சரிதம்
எனும் இம்மலரினை
தம் பாதக்கமலங்களில்
காணிக்கை செய்கிறோம்




நீங்கா நினைவுகளுடன்
மனைவி மக்கள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அன்னை மடியில்
30
.
05
.
1956



ஆண்டவன் நிழலில்
16
.
05
.
2022

யாழ்/ வண்ணை வட கிழக்கு கலட்டி
இல: 30, சீனியர் ஒழுங்கையை பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்.இராசா பொன்குமார்

## அவர்களின் திதி நிர்ணய வெண்பா

ஆண்டு நல் சுபகிருது ஆனதோர் வைகாசித் திங்கள்
அமைந்த நல் அபரபக்ஷ பிரதமைத்திதி துலங்க
தெய்வத்திரு இராசா பொன்குமார் மதிப்புமிக்க சீராளன்
தெள்ளிமுகன் வீரகத்தியான் திருக்கமலம் சென்ற நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்



*திருச்சிற்றம்பலம்*

-கணபதி துணை

திருவாக்கும் செய்கருமம் கை கூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

## தேவாரம்

மங்கயற் கரசி வளவர்வைகோன் பாவை
வரி வளைக்கை மட மானி
பங்கையற் செல்வி பாண்டிமாதேவி
பணி செய்து நாடொறும் பரவ
பொங்கழல் உருவன் பூத நாயகனாய்
வேதமும் பொருட்களு மருளி
அங்கையற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆல வா யாவது மிதுவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்தஎம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன்யார்க் கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்று அருள்புரியாயே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னில் செய் மண்டபத்துள்ளே
புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைக்கோன்
அடி யோனுக் கருள் புரிந்த
பின்னைப் பிறவி யறுக்க நெறி தந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கரும்புமுதல் கடிமலர்ப் பூங்கழல் போற்றி
உத்தரியத் தோடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி
கவுணியர்க்கு பால் சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம் பிராட்டி
அரும்பும் இளநகை போற்றி ஆரண நூபுரஞ்
சிலம்பும் அடிகள் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்த்தமுகம் ஒன்றே
குன்று உருக வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்யவிரும்பிய அன்பர் விழங்குக
சைவ நன் நெறிதான் தழைத்தோங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே

திருச்சிற்றம்பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இராசா பொன்குமார்

## அவர்கள் வாழ்க்கை வரலாறு

சுவர்ணபுரி, குபேரபுரி, சிவபூமி என்றெல்லாம் சான்றோரால் போற்றப்பட்ட ஈழமணித்திருநாட்டின் வடபால் கந்தபுராணமும், கலாச்சாரமும் மேலோங்கி விளங்கும் நல்லை அலங்காரக் கந்தன் அருளாட்சி புரியும் யாழ். மாநகரில் ஆடி அலை கரை கொஞ்சும் அழகுக் கடல் சூழ தேடி அருள்தரும் தெள்ளிமுகன் வீரகத்தி விநாயகனும் ஆடல் அரசனின் அங்கம் பாதி கொண்ட மாரி அன்னையும் கூடி உறையும் காவல் தெய்வம் ஞான வைரவரும் அருளாட்சி செய்யும் கோவிலுஞ்சுனையும் நறுமலர்க்காவும் நன்நீர் ஊற்றும் ஏரியும் குளமும் எழில் நிறை தருவும் தானசையும் தென்றலும் தனியழகுத் தென்னையும் வானம் மும்மாரி பொழிகின்ற வனப்பும் பச்சை அலையடிக்கும் பசுமை நிறை வயல்களும் கன்னற் சோலைகள், செந்செற் களனிகள், ஆவினம், காவினம், ஏனைய விலங்கினம், சோலையில் வாழ்கின்ற சுந்தரப்புல்லினம் பூக்களின் அழகிலே பூமியே சிரிக்கும் புண்ணிய ஊரிலே அறிஞர்கள், கவிஞர்கள், பாவலர், பண்டிதர் பெரும் புலவர்கள் வர்த்தக பெருந்தகைகள் அத்தனை பேரையும் தன்னகத்தே கொண்ட அழகிய வண்ணை என்றொரு வளர்பதி உள்ளது.

இப்பழம் பெரும் பதியாம் வண்ணை வட கிழக்கில் பிரபல வர்த்தகரான அமரர் இராசா அமரர் தையல் முத்து தம்பதியினர்க்கு ஆறாவது முத்தாக அமரர் பொன்குமார் அவர்கள் 1956 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 30 ஆம் திகதி இப்பூவுலகில் பிறந்தார் அன்னாரது உடன் பிறப்புக்கள் அமரர் விஜயானந்தன், அமரர் குலசிங்கம் சீதாதேவி கமலாதேவி அமரர் ரஞ்சிதாதேவி ஸ்ரீக்குமார் ஆவார்.

அன்னார் தனது கல்வியை யா/இந்துக் கல்லூரியில் கற்றார் மேலும் குடும்ப வறுமையினால் தனது கல்வியை மேலும் தொடர இயலாமையால் தாயுடன் கடதாசி சேகரித்து பை ஒட்டி வியாபார ஸ்தலங்களுக்கு விற்பனை செய்தும் அதன் பின் மின் இணைப்பு வேலைகளை செய்து தனது குடும்பத்தை கவனித்து வந்தார் பின்னர் திருமண பருவம் வந்ததும் வேலணை மேற்கைச் சேர்ந்த அமரர் சண்முக நாதன் அமரர் நவரெத்தினம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருமுறைச் செல்வி எனும் மங்கை நல்லாளை தனது சுய விருப்பத்தின் பேரில் 1981 ஆம் ஆண்டு மணம் முடித்து மகிந்தராஜா, பபிலா, அகிலா ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாக கண்டு பெரிதும் இன்புற்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் வெதுப்பக தொழிலைப் பழகி வவுனியா, பின்னர் நாகபடுவானில் ஐங்கரன் வெதுப்பகம் எனும் நாமம் சூட்டி தனது கன்னித் தொழிலை ஆரம்பித்து முன்னேற்றப் பாதையில் முதல் அடி எடுத்து வைத்தார். பின்னர் தனது பிறந்த இல்லத்தில் வந்து மீண்டும் கோப்பாயில் வாடகை கடை ஒன்றைப் பெற்று அங்கே ஐங்கரன் வெதுப்பகத்தை நிறுவினார். பின்னர் யாழ்ப்பாண இடப் பெயர்வின் காரணமாக மீண்டும் வன்னி சென்று முழங்காவில் பகுதியில் ஒரு வெதுப்பகத்தை நிறுவி திறம்பட நடாத்தியும் வந்தார்.

பின்னர் மீண்டும் யாழ்ப்பாணம் தனது பிறந்த இடத்தில் மீண்டும் வந்து கோப்பாயில் நடாத்திய வெதுப்பகத்தை தொடர்ந்து நடாத்தியும் வந்ததோடு மட்டுமல்லாது அந்த வெதுப்பகத்தையும் அதன் அருகே உள்ள சரஸ்வதி விலாஸ் எனும் சைவ உணவகத்தையும் தனது சொந்த உடமையாக்கியும் கொண்டார். பின் 60 வயதுடன் ஓய்வு எடுத்து வீட்டோடு இருப்போம். என எண்ணி இருக்கையில் தனது பிறந்த இடமான சீனியர் ஒழுங்கைக்கு அருகில் தட்டாதெரு சந்தி அருகாமையில் ஒரு வெதுப்பகத்தை தொடங்க வேண்டும் என்ற பெருவிருப்பு கைகூடிவர அங்கும் ஐங்கரன் வெதுப்பகத்தை நிறுவி மிகவும் சிறந்த வர்த்தகராக சமுதாய நன்மதிப்பைப் பெற்றார்.

தான் பிறந்த இடத்திலே காணி வாங்கி இரு வீடு கட்டியதோடு கோப்பாய் வெதுப்பகத்திலும் ஒரு வீட்டைக் கட்டியும் மகிழ்ந்ததோடு இடப்பெயர்வால் சிதைவுற்ற தனது மனைவி வழிச் சீதண வீட்டையும் சிறந்த முறையில் கட்டி கிரகப் பிரவேசமும் கண்டார். அத்தோடு வெதுப்பக உற்பத்தியாளர் சங்க உறுப்பினராகவும், வெதுப்பக உற்பத்தி உபகரணங்களின் இறக்குமதி செய்து வினையோகிப்பவராகவும் வியாபார நிமித்தமாக வெளியூரான தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் சென்று தனது தொழில் திறமையை மென்மேலும் வளரச் செய்தார் சிறந்த தொழிலதிபராக விளங்கியதோடு பிள்ளை களுக்கும் சிறந்த தந்தையாகவும் சிறந்த கணவராகவும் நல்ல குடும்பத் தலைவனாகவும் திகழ்ந்தார் என்றால் மிகையாகாது அந்த வகையில் மகன் மகிந்தராஜாவை சிறந்த முறையில் கற்பித்ததோடு அவரை 1999ம் ஆண்டளவில் பெரிய பிரித்தானியாவிற்கு அனுப்பி வைத்து மகிழ்வுற்றார். மகள் பபிலாவை முகாமைத்துவ கல்வியை கற்பித்ததோடு (Diploma of Management) இளைய மகள் அகிலாவை இளங்கலை (B.Sc) விஞ்ஞான மானி பட்டதாரி ஆக்கியதோடு கிளி/ முழங்காவில் மகாவித்தியாலய ஆசிரியராகவும் ஆக்கி வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் மகிந்தராஜாவுக்கு வேலணையைச் சேர்ந்த மகேஸ்வரநாதன் சமயதேவியின் மகள் கஜலக்ஷியை மணம் முடித்து வைத்தும் மகிழ்ந்தார் மகள் பபிலாவை பூநகரியைச் சேர்ந்த சபாரட்ணம் நாகேஸ்வரியின் மகன் ஜெயகுமாரர் (B.Com, M.Com) அவர்களை மணம் முடித்து வைத்து கோகுலநாத், நிருராஜ், கிஷான் ஆகியோரை பேரச் செல்வங்களாகக் கண்டு பெரிதும் மகிழ்ந்தார். அத்தோடு கல்வி அனுமதி மூலம் (Student Visa) பெரிய பிரித்தானியாவுக்கு அனுப்பி வைத்து இன்புற்றார்.

இளைமகள் அகிலாவை வரணியைச் சேர்ந்த சின்னத்துரை சின்னம்மாவின் மகன் சிவச்சந்திரன் (B.A, M.A) ஆசிரியர் யா/மத்திய கல்லூரி) அவர்களைத் திருமணம் முடித்து வைத்து அக்ஷிகா, கிஷானிகாவை பேரச் செல்வங்களாக கண்டும் பெரிதும் இன்புற்று மகிழ்ந்தார். தன் குலதெய்வங்களான கலட்டி வீரகத்தி விநாயகர் மகாமாரி அம்மன் மீது அதிக பக்தி கொண்டவர் அத்தோடு வீரகத்தி பிள்ளையார் கணபதிஹோமம் நாகபடுவான் ஐயனார் சித்திரா பௌர்ணமி பூசை முழங்காவில் 31ஆம் கட்டை சின்னக்கதிர்காமம் சூரன் போர் போன்ற உபயங்களை ஆண்டு தோறும் செய்துவந்ததோடு இந்திய புண்ணிய திருத்தல யாத்திரையும் மேற்கொண்டு திருச்சி உச்சிப்பிள்ளையார், உறையூர் வெக்காளி அம்மன் மதுரை மீனாட்சி, சபரிமலை ஐயப்பன் காசி தரிசனம் செய்து ஆண்மீகத்தோடும் ஆண்டவன் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர் என்றால் மிகையல்ல அன்னார் ஆண்மீகத்தோடு மட்டுமல்லாது சமூகசேவையிலும் குறிப்பாக தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு உதவி செய்து அவர்களின் கல்வி செயற்பாடுகளையும் ஊக்குவித்தவர் அத்தோடு துடுப்பாட்டத்தில் (Criket) அதீத பிரியமானவர் முழங்காவில் விநாயகர் விளையாட்டு கழகத்திலே தன் முதுமையிலும் மன உறுதியோடு துடுப்பாட்டத்தில் பங்கு கொண்டதோடு கழகத்திற்கு தேவையான உதவிகளையும் செய்து ஊக்குவித்தவர் அத்தோடு தன் உறவுகளின் எந்த நிகழ்வுகளிலும் தானே முன்னின்று திறம்பட நடாத்தி வைப்பதோடு மட்டுமல்லாம் எல்லோருக்கும் தன்னால் முடிந்தளவு உதவிகள் செய்வது இவருக்குரிய தனிப்பண்பு.

அத்தோடு மட்டுமல்லாது உறவினர்கள், ஆனாலும் சரி நண்பர்கள் ஆனாலும் சரி வியாபார ஸ்தாபனங்களைப் புதிதாக திறக்கும் பொழுது இவர் சிறந்த கைராசிக்காரன் என்று இவரது கரங்களால் நாடா வெட்டி திறப்பதும் வருடப்பிறப்பு போன்ற சுபதினங்களில் அன்னாரது கரங்களால் கைவிஷேசம் பெறுவதும் இவருக்கே உரித்தான தனித்துவம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி என்று வருவபவர்க்கு உதவுவதும் தன்னுடைய வியாபார ஸ்தாபனங்களுடாக எத்தனையோ உழைப்பாளிகளின் குடும்பங்களுக்கு உயர்வழி காட்டுவதும் அன்னாரது நற்பண்புகளாகும். நற்குணமும் எல்லோரையும் மதிக்கும் மனப்பாங்கும் கொண்டவர் ஆண்டுக் கொருமுறை வெங்காளி அம்மனிடம் போய் வழிபடாமல் இருந்த வரலாறே இல்லை என்று சொல்லலாம் இளமையில் விநாயகர் அம்மன் மீது பக்தி கொண்டிருந்தாலும் காசி விஸ்வநாதர் தரிசனத்தின் பின்பு சிவனை நோக்கியே இவரது கரங்கள் நீளத்தொடங்கியது தன்னுடைய இறுதிக்காலத்திலும் பாடல் பெற்ற ஈச்சரங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் மற்றும் நகுலேஸ்வரம் செல்ல வேண்டும் என்று சதா சொல்லிய வண்ணம் இருப்பார்.

இருதய நோயால் பாதிக்கப் பட்டிருந்தாலும் ஓயாது உழைத்த ஒரு வர்த்தக பெருமகன் தனது உடற்பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு தனது உந்துருளியிலேயே சென்று வைத்திய பரிசோதனையின் போது 16ஆம் திகதி வைகாசி மாதம் 2022 ஆண்டு இரவு 8 மணி 37 நிமிடமளவில் மான்மழுவேந்தியாடும் மன்னவன் மாதொரு பாகன் காசி விஸ்நாதன் பாதார விந்தங்களை அடைந்தார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**மனித வாழ்வில் தெரிந்திருக்க வேண்டிய சில உண்மைகள்**

- தாயும் தந்தையும் கண்கண்ட தெய்வம்
- அன்னையின் ஆசியில் ஆண்டவனைக் காணலாம்
- நல்ல குரு வாய்த்தல் ஆண்டவன் கொடை
- நல்ல துணை அமைதல் ஆண்டவன் கருணை
- நல்ல பிள்ளை கிடைத்தல் ஆண்டவன் அருள்
- நல்ல நட்பு கிடைத்தல் பிறவியின் பயன்
- நன்மையையும் தீமையும் பிறர் தர வரா
- வாழ்க்கை என்பது பெயர் தெரியாத ஊருக்கு வழி தெரியாத பயணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மனைவியின் புலம்பல்....

என் அன்பு நிறைந்த
என் அருமைத் தெய்வமே
எங்கே போனீர்கள்

மாலையோடு மணவாளன்
மனைவருவான் என்று
சோதிடர் சொன்னது போல்
வாழ்வு தந்த நாயகனே

நேர்கொண்ட பார்வையுடன்
நிமிர்ந்த அழகு தோற்றமுடன்
நாலுமுழ வேட்டியுடன்
நயினையிலே கண்டேனையா

வசந்தி என்று வந்த என்னை
வழமான வாழ்வு தந்து
வாழ்வின் பொக்கிஷம் ஆனவரே
வாழ்வளித்த மன்னவரே

மதுரை மீனாட்சி அம்மனிலே
மாங்கல்யம் சூட்டி எந்தன்
மணவாழ்வு சிறக்க நல்ல
திருவாழ்வு தந்தவரே

நான்கு பத்து ஆண்டுகளில்
நற்புத்திரனையும்
நல்லயிரு புதல்விகளும் பெற்றதொடு
நலம்வாழ வாரீ வழஙகுனீர்கள் ஐயா!

தன்னலம் பேணாது என்றும்
பிறர்நலம் பேணும் வள்ளலே
என்னை மட்டுமல்ல என் குடும்பத்தையும்
தாங்கிய உங்கள் கரங்கள் எங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பால் எமைத் தாங்கியே
உறவுகளின் வளர்ச்சிக்கும் ஏணியானீரே
மின் இணைப்பைத் தொடங்கியே
பின் வெதுப்பகத்தால் உயர்ந்தீரே

உங்களை யல்லாது இவ்வுலகில்
உற்ற செயல் செய்தறியேன்
தேவை எது வென்று நானும்
தெரிவிக்க முன்னே செய்தீரே

உங்களோடு வாழ்ந்த காலங்கள்
உயிர் சாயும் வரை உள்ளம் மறக்காது
காலம் சென்றாலும் காரியங்கள் செய்தாலும்
கணவனுன் கருத்து கண்ணில் நிழலாடுமையா

என்னையுமென் செல்வங்களையும்
மண்ணிலே தவிக்க விட்டு விட்டு
விண்ணிலிருந்து ஆளுகின்ற
விகிர்தனிடம் சென்ற தேனோ.....

## மனித வாழ்வில் தெரிந்திருக்கவேண்டிய சில உண்மைகள்

- தாயும் தந்தையும் கண்கண்ட தெய்வம்
- அன்னையின் ஆசியில் ஆண்டவனைக் காணலாம்.
- நல்ல குரு வாய்த்தால் ஆண்டவன் கொடை
- நல்ல மனைவி அமைதல் ஆண்டவன் கருணை
- நல்ல பிள்ளை கிடைத்தல் ஆண்டவன் அருள்
- நல்ல நட்பு கிடைத்தல் பிறவியின் பயன்
- பிள்ளைகளின் நடத்தைக்குப் பெற்றோரே பகைவர்
- வாழ்க்கை என்பது பெயர் தெரியாத ஊருக்கு வழி தெரியாத பயணம்.
- நன்மையும் தீமையும் பிறர்தரவாரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் மகிந்தராஜாவின் உள்ளக்குமுறல்.......

தப்பாமல் எமையிந்த
தரணியிலே உயர்த்தி வைத்த
அப்பாவே எங்கு சென்றீர்

தூங்கத் தாலாட்டித்
தோள் சுமந்த தெய்வமே
தூரதேசம் சொல்லாது
போன மாயமென்ன.....

கொள்ளிக்குடம் சுமக்க எனக்கு
கொடுத்து வைக்கவில்லை
அள்ளி நான் அரிசியிட
ஆண்டவனும் அனுமதிக்கவில்லை

மண்ணிலே எமக்காக
மணிக்கணக்காய் உழைத்தவரே
விண்ணுக்கு சொல்லாமல்
விட்டுப்போன மாயமென்ன....

தேடித்தேடி எங்கள்
தேவை தீர்த்த அப்பாவே
கூடுவிட்டுப்போன
கோலம் என்ன போலமோ....

தகப்பனோடு ஒன்றாய் இருந்தால்
தனயனுக்கு ஆகாது என்று
தூரதேசம் அனுப்பி வைத்தீர்கள்
பதினேழு ஆண்டுகளாய் பார்க்க முடியவில்லை
இனி எப்போதான் காண்பேனோ
என் ஆசை அப்பாவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்ல மகள் பவி மனதிலிருந்து....

உள்ளக்கோயிலிலே உறைந்திருந்த அப்பாவே
உந்தன் குரல் கேட்டாலே உள்ளங்கனிந்து கொள்வேனே
அன்பான வார்த்தைகளால் ஆறுதலும் சொல்லுவீர்கள்

கேட்டவரம் என்றால் அள்ளித்தந்திடுவீர்
கேளாத வரம் என்றாலும் வாரித் தந்திடுவீர்
கல்வி வளம் பெருக நீங்கள் கல்லூரிக்கு அனுப்பினீர்கள்
முகாமைத்துவ பட்டம் பெற உங்களை அர்ப்பணித்தீர்கள்
முழுமனதாய் மாங்கல்யம் முடித்தும் வைத்தீர்கள்

பெற்ற பிள்ளையின் பிரிவையும் தாங்கி- என்னையும்
உங்கள் தலைப்போரனையும் இணைத்து நீங்கள்
பெரிய பிரித்தானிய அனுப்பி வைத்தீர்கள்
பெற்ற பிள்ளையின் புத்திரர்களோடு
தினமும் பெருமை வார்த்தை பேசி மகிழ்வீர்களே!

நாட்டுக்கென்னை ஒரு தசாப்தம் கழிய வரவேண்டி அழைத்தீர்கள்
நயப்புடன் பேசி மகிழ்ந்து கர்வமுற்றீர்கள்
பேரர்களை கட்டியணைத்து பேரன்பு காட்டினீர்கள்
பேரா என்று கத்திக்கொண்டு Milo பாலோடு வருவீர்கள்

உங்கள் பெயர் தினமும் எண்ணி - தினமும்
உறக்கமின்றி தவிக்கிறேன் அப்பா
காய்ச்சல் என்று சொன்னாலும் தலை வருடி விடுவீர்கள்
கதைக்காமல் இருந்தாலும் ஒரு அழைப்பு தருவீர்கள்

மூத்த பேரன் கோகுலுக்கு முதுகெலும்பாய் இருந்தீர்கள்
(கண்டதும்) முதல் பிறந்த நாள் கொண்டாடி குதூகலித்தீர்களே
நடுவில் பேரன் நிருவுக்கு நாடியாக இருந்தீர்கள்
நாட்டுக்கு வா பிறந்தநாள் செய்யலாம் என்றீர்கள்
இளையபேரன் கிஷானின் இதயத்திலே இருந்தீர்கள்
இனிமையாக பேசிப்பழக இருக்கவில்லையே நீங்கள் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பதுன்பம் என்கின்ற இக்கட்டான வேளையில்
இனி என்ன செய்வோம் என்றும் இன்னல் வரும் நேரத்தில்
பவி என்று ஹோலல் வரும் பக்குவமாய் பதில் வரும்
பறந்து விடும் துன்பம் எல்லாம் உங்கள் குரல் கேட்டதும்
பெண் பிள்ளையானாலும் பொன்னின் பிள்ளையென்று
பெருமையாக வாழ்கின்றேன் உங்கள் பெயர் சொல்லி
அந்தரத்தில் எமைவிட்டு அமைதியாகி விட்டீர்கள்
உங்கள் குரல் கேட்க அனுதினமும் வேண்டுகிறேன்.

வைத்தியசாலையிலிருக்க Viber இல் பேசினேன்
முதன்முறை எடுத்த போது முகம் மலர்ந்து கதைத்தீர்கள்
மறுமுறை எடுத்த போது பேரன் கோகுல் காத்திருக்கான் என்றேன்
மூன்றாம்முறை எடுக்கையிலே மூச்சுவிடக் கஷ்டம் என்றீர்
இறுதியாக எடுத்த தொடர்பால் இடி விழுந்து போனதப்பா
இனி எமக்கு யார் இருக்கார் ஆறுதல் சொல்ல என்னிடம்
வாரீர் எங்கள் அப்பா வாரீரோ எங்கள் அப்பா......

-செல்ல மகள் பவி-

**கீரை வகைகள்**

முளைக் கீரை பசியை தூண்டி கண்களுக்கு குளிர்ச்சியை அளிக்கிறது
அரைக் கீரை காய்ச்சல ஜன்னி கபம் வாதம் போன்ற நோய்களை நீக்கும்
தண்டுக் கீரை ரத்த சோகையை தடுக்கும்
சிறு கீரை கண்களை நீக்கி பார்வையை பிரகாசமாகும்
புளித்த கீரை வயிற்றுப் புண்ணை ஆற்றுகிறது
வல்லாரைக் கீரை ஞாபக சக்தியை அதிகரிக்கும்
பொன்னாங்கன்னி கீரை மூல நோய், கண் நோய்களை தடுக்கும்
பசளிக் கீரை உடலின் சிவப்பணு உற்பத்திற்கு உதவும்
அகத்திக் கீரை இரும்புச்சத்து அதிகம் கெட்ட கொழுப்புகள் கரைய உதவுகிறது
புதினா கீரை இரத்தத்தை சுத்திகரிக்கும்
கொத்தமல்லிக் கீரை சரும பிரைச்சினைகளை தடுக்கிறது
கறிவேப்பிலை கண, கல்லீரல் நோயை தடுக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை மகள் அகிலாவின் மனக்குமுறல்...

அன்பின் இலக்கணமாய் பண்பின் உறைவிடமாய்
ஆண்டவராய் எம்மவர்க்கு அனுக்கிரகம் செய்தீர் அப்பா
இனிமையான பேச்சும் இதமான பார்வையும்
ஈரநெஞ்சோடு உறவாடும் எங்கள் அப்பா

உழைக்கும் கரங்களாலே உதவி பல செய்தீர்கள்
ஊக்கமிகுதியால் எமை உயர்த்தி வைத்தீரப்பா
எண்ணம் போல் வாழ்வு வாழ்ந்து எனை
ஏணியாகயிருந்து கசறடக் கற்க வைத்தீரப்பா

ஐயனார் பக்தனாகி அன்னக்கஞ்சி வார்த்தீரே
ஒன்றுபட்டு குடும்பமதை ஒய்யாரமே ஒச்சினேரே அப்பா
ஓங்கார கணபதியின் இஷ்ட பக்தனப்பா நீங்கள்

கற்க வேண்டுமென்று கணக்குத்துறையை கற்பித்தீர்
கணக்காசிரியை ஆக்கி வைத்து கர்வம் கொண்டீரப்பா
பட்டம் பதவி அத்தனையும் பெறவும் செய்தீர்கள்
பண்பாய் வாழ பாரினிலே பழக்கி வைத்தீர்களப்பா
கடைக்குட்டி என்று என்னை உங்களடியில் வைத்தீர்கள்
கண்ணிமைக்கும் போதெல்லாம் கண்முன்னே நின்றேனப்பா
கல்யாண நேரமதை கணக்காய் பார்த்து வைத்தீர்கள்
கலகலப்பாய் திருமணத்தை களிப்புடனே செய்தீரப்பா

அன்பாலே அகி என்றும் பண்பாலே கறுப்பியென்றும் ஆசையாக
கூப்பிடுவீர் அடிக்கடி சண்டைசெய்வீர் ஆனந்தத்தில் சரணடைவீரப்பா
அருமை உணவு ஆக்கித்தந்து கூடியும் உண்பீர்கள்
அகி ஹோட்டலுக்கு போகலாமா என்று கிண்டலும் செய்வீரப்பா
இத்தனையும் செய்ய எனக்கு யாரிருப்பாரோ....
இனி யாரிப்பாருரோ அப்பா யாரிருப்பாரோ...

தனி வாழ்க்கை எனக்கமைத்து செலவும் செய்தீர்கள்
தன்பிள்ளைகளுக்கு மேலாக என் மகளுடன் மகிழ்வீர்கள் அப்பா
அன்போடு அக்ஷியையும் கருணையோடு கிஷானியையும்
அணைத்து கொண்டீர்கள் சிரித்தும் பேசுவீரப்பா


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்பேத்தி கிஷானிக்கு பல்லுக்கொழுக்கட்டையும் கொட்டினீர்கள்
தாத்தா எங்கே என்றால் தலைசுற்றி போவேனப்பா

வருத்தம் இல்லாதவர் போல் வைத்தியசாலை சென்றீர்கள்
மதியம் பார்க்க வந்தேன் மனமகிழ்ச்சியாய் இருந்தீர்களப்பா
மாலையில் பார்க்க வந்து பாலும் களியும் ஊட்டினேனே
இருமணி நேரம் செல்ல இறுக்குது நெஞ்சை எண்டீர்களப்பா

இக்கட்டான நேரம் என்று இரவோடே வந்திருந்தேன்
அவசர சிகிச்சை பிரிவில் ஆட்கள் எல்லாம் சுற்றி நிற்க
அப்பா என்று கத்தி நிலமதிர விழுந்தேன் அப்பா
அரவணைக்க யாருமின்றி ஆறுதலுமின்றி தவித்தேன் அப்பா

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த ஆசானே
அரைகுறையாய் எமைவிட்டு எங்கே போனீரப்பா
உங்களுக்கு இணையாக எங்களுக்கு யாரிருப்பார்
வாரீரோ எங்களப்பா அப்பா....... அப்பா.............. அப்பா.........

-மகள்: அகிலா-

**உணவு பழக்கம் பழமொழி வடிவில்**

இரத்த கொதிப்புக்கு அகத்திக் கீரை
இருமலை போக்கும் வெந்தயக் கீரை
உண்ணா நோன்பு ஆயுளைக் கூட்டும்
உஷ்ணம் தவிர்க்க கம்பங் களி
கல்லீரல் பலம் பெற கொய்யாப் பழம்
குடல்புண் நலம் பெற அகத்திக்கீரை
சித்தம் தெளிய வில்வம் பழம்
சிறுநீர் கடுப்புக்கு அன்னாசி
சீரகம் இல்லா உணவு சிறக்காது
சூட்டைத் தணிக்க கருணைக்கிழங்கு
தன் காயம் காக்க வெங்காயம் போதும்
தலைவலி நீங்க முள்ளங்கிச்சாறு
தேனுடன் இஞ்சி இரத்தத் தூய்மை
பருமன் குறைய முட்டைக்கோவா
பித்தம் தணிக்க நெல்லிக்காய்
பூண்டில் இருக்குது நோய்யெதிர்ப்பு சக்தி
மூலநோய் தீர வாழைப்பூ கூட்டு
வாழை வாழ வைக்கும்
வாந்திக்கு மருந்து மணத்தக்காளி
வாத நோய் தடுக்க அரைக்கீரை
வாய் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்
ஜீரண சக்திக்கு சுண்டைக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமாவின் நினைவுகள் என்றும் நீங்காது

புவிவாழும் மனிதரெல்லாம்
போற்றிடும் மனிதப்பண்பு
செயல்திறன் நிறைந்து காணும்
உயர்வுடைய புனித உள்ளம்
குடும்பத்தின் உயர்வுக்காய்
குன்றிலிட்ட தீபம்போல்
ஓய்வின்றி உழைத்துவந்த
மாமாவே எங்கு சென்றீர்

தகைமைக்கு ஏற்றால் போல்
தடையின்றி லண்டன் சென்று
குடும்பமாய் நாங்கள் வாழ
வைத்து நல் வழியும் காட்டி
பெற்றவர் உயர்வை எண்ணி
புண்ணியக் கோவில் நண்ணி
யாத்திரை பலவும் செய்து
யாவையும் நலமாய்த் தந்தீர்

மனிதரின் வாழ்வு நீரிலேகுமிழிபோல
என்ற தத்துவம் நிலைத்திட தரணியை
விட்டு போனீரோ மாமா

**பிரியமுடன் மருமகன் ஜெயக்குமார்.**

நீரிழிவு, சிறுநீரக நோய்களை
குணப்படுத்தக்கூடிய காய்கறி, பழவகைகள்

- பாகற்காய்
- புடலங்காய்பூ
- சணிக்காய்
- சுண்டைக்காய்
- வெண்டைக்காய்
- கொத்தவரங்காய்
- வாழைத்தண்டு
- வாழைப்பூநாவல்
- பழம்சாத்துக்குடி
- கிவி பழம்
- எல்லாவகை கீரைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய மருமகன் சிவச்சந்திரன் நாவிலிருந்து...

மாமா என்றழைக்க யாருமில்லை - என்னை
மருமகன் என்றழைக்க யாருமில்லை
தன்னுயிர் மேலான மகளையளித்தீர்
இல்லற வாழ்வில் இன்புற வைத்தீர்கள்

வாழ்விலே பல வரலாறு படைத்தீர்கள்
வையம் எங்கும் வரவேற்படைந்தீர்கள்
கூட்டான குடும்பத்தில் விளக்காக ஒளிர்ந்தீர்கள்
குதூகலிக்க பல நகைச்சுவை சொன்னீர்கள்

கடமைக்கு கட்டாயம் முன்னுரிமை கொடுப்பீர்கள்
கச்சிதமாய் காரியத்தை கணகணப்பாய் முடிப்பீர்கள்
செய்தொழில் கருமங்கள் நேர்த்தியாக செய்து
என்னையும் அத்தொழிலில் தேர்ச்சி பெற வைத்தீர்கள்

எனக்கென்றும் என் துணைக்கென்றும் மட்டுமல்லாது
என் மகவுகளுக்கும் பல பணிகள் செய்தீர்களே.....
அசதியாகத் தூங்கும் போதும் அயர்ந்து தூங்கும் போதும்
அண்டையில் ஒட்டிக்கிடக்கும் அக்ஷிக்கு என்ன சொல்ல
கிளுகிளுப்பாக நெஞ்சில் தூங்கும் கிஷானிக்கு என்ன சொல்ல
தாத்தா என்று கூப்பிட்டால் தன்னை மறந்து நிற்பீர்களே
எங்கே தாத்தா என்றால்....
என்னதான் சொல்லுவேனோ................மாமா ....

விழுந்தும் விழாதவர் போலும் சரிந்தும் சரியாதவர் போலும்
வலிந்தும் வலியாதவர் போலும் வைத்தியசாலையில் இருக்கையில்
அருகில் நில்லுங்கள் மருமகன் என்றீர்கள் - அடிக்கடி
அருந்த தாருங்கள் மருமகன் என்றீர்கள்

காலன் வருவான் என்ற கதை தெரிந்திருந்தால்
காலால் எட்டி உதைத்திருக்க மாட்டேனோ
பாசத்தையும் நேசத்தையும் கலந்து ஊட்டிட்டு
பாதியில் விட்டு விட்டு போனீர்களே மாமா....

-மருமகன் சிவச்சந்திரன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தாத்தாவை இழந்து தவிக்கின்றோம்

துள்ளித் திரிந்த கால்கள் ஏன்
துவண்டு போனது எமை
அள்ளி அணைத்த கரங்கள் - ஏன் அமைதியானது
பொன்னெழில் பூத்த உம் வதனம் நெஞ்சம் மறக்குமா
ஆசையாய் கொஞ்சும் அன்பினை நாம்
ஏன் இழந்தோமோ

மடியில் தூக்கி மழலை மொழி
கேட்கும் தாத்தாவே - எம்
மனது மகிழ பேசும் மொழி அமைதியானதே
பேராண்டி என்று அழைக்கும் போது
காதில் தேனாறு பாயுமே
கோகுலநாத் எனைக் கொஞ்சிட
எப்போ தான் வருவீரோ

நிருராஜ் எந்தன் நினைவில்
என்றும் நீங்கள் தான் தாத்தா
கிஷான் என்று அள்ளி அணைக்கும்
அன்பு தாத்தா எங்கே?

அக்ஷிகா என்றே அன்பாய் கொஞ்சும்
ஆசை முத்தம் எங்கே
கிஷான்னிகா என்று தாங்கிய கரங்கள்
தாத்தா நீங்கள் எங்கே

விளையாட்டு பொருட்கள் வாங்கிவர
விட்டு விட்டு போனீரோ
அணையாத தீபமாய் ஒளிதந்து விட்டு
அமைதி யானீரோ
இதமாய் பேசும் இதயம் கொண்ட எங்கள் தாத்தாவே
இறைவனோடிருந்து தோன்றா துணையாய்
இனி எமைக் காத்திடுவீர்

**உங்களின் பேரச்செல்வங்கள்,**

**கோகுலநாத், நிருராஜ், கிஷான், அக்ஷிகா, கிஷானிகா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர் புலம்பல்

ஓடித்திரிந்த கால்கள் எங்கே...
உதவ வரும் குயிலும் எங்கே
தாயின் வழிவந்த சொந்தமே
தவிக்கவிட்டு சென்றதெங்கே
சுழல் காற்று வீசியதோ
சூறை வந்து மோதியதோ
எழில் வீணை அதன் தந்தி
இரு துண்டாய் ஆனதுவோ
காலன் அழைத்தானென்று
கன தூரம் சென்றீரோ
ஞாலம் கசந்த தென்று
நல்லுலகு போனீர்களே!
உடன் பிறந்த சொந்தமே
உனை இழந்து தவிக்கின்றோம்
உன் போல சகோதனை நாம்
எப்போது தான் காண்போம்.

## பெறாமக்களின் மீளும் நினைவுகள்

சித்தப்பா என்றழைக்கும் போது சிறிய சிறிய நினைவலைகள் எமை
வாட்டுகிறதே! நாவல் மரத்தின் கீழ் படம் பிடித்த ஞாபகம்,
முழங்காவில் மண்ணில் ஊர் சுற்றி விளையாடிய ஞாபகம் ,
ரீயூசனால் வரும் வரை உணவு உண்ணாமல் காத்திருந்த ஞாபகம்...
சில காலம் காணவில்லை என்ற போது....திடீரென காணாமல் போவேன்
என சொன்னபடி ஏன் சென்றீர்கள் சித்தப்பா..!
பார்க்கவருவோம் பிள்ளைகளுடன் என்றிருக்கையில்
பார்க்குமுன் பாரினை விட்டுச்சென்றதேனோ?
அப்பா இல்லாத போது அப்பா என நினைத்தோமே!..மகளே..!என்று
இனி யார் எனை அழைப்பார் ? அண்மையிலிருந்து அன்புடன்
வாழ்ந்தது மிகக் குறுகியது. அந்நிய நாட்டில் வாழ்ந்தாலும்
அன்பு குறைய வில்லையே! இறைவன் கணக்கு இது !
இனி காணமுடியாத சோக நிலையோடு இங்கிருறந்தே
ஏங்கியழுகின்றோம்...!

நன்றி
பெறாமகள் (பேபி அண்ணா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்போ காண்போமோ...

இதுவரை வாழ்ந்த வாழ்வில்
இவரைப் போல ஒருவரை நான்
இகத்திலே காணவில்லை
இனிக்காண்பேனோ தெரியவில்லை
நினைவுகள் ஒவ்வொன்றும்
நெஞ்சம் தினம் மீட்க
நிஜமாய் உங்களை இழந்தோமா-என்று
நினைக்கிறது மனது

மண்ணில் பிறந்த மாந்தர்க்கு
மரணம் என்பது நிச்சயம்
ஆனாலும் அத்தான் உங்கள் இழப்பு
ஆற்ற முடியாத பெருந்துன்னம்
அன்று என் அக்காவை கரம் பிடித்த போது
மாலை போட்டு உபசரித்த நான்
இன்று உங்கள் இறுதிக் கிரிகையிலே
மாலையிட்டனுப்புவேன் என எண்ணவில்லை

அத்தானாய் எம் குடும்பத்தில் வந்து
அன்பு சகோதரனாய் உயர்ந்தீர்கள்
என் பெற்றவர்க்கு மூத்த மகன் போல
என் உற்றவர்க்கும் உதவியது ஏராளம்
கடல் கடந்து சென்றதனால் தங்கள்
கனிவான பேச்சை அருகிருந்து கேட்க அமையவில்லை
ஆனாலும் அலைபேசி வழியாக
ஆசை மொழி கேட்போமே

என் மகளின் மண நாளில் நீங்கள்
ஆசீர்வதிக்கவே ஆவலாய் நாம் வாழும்
கனடிய தேசம் வந்து மனதார வாழ்த்து கூறி
கனடா மொன்றியல் கந்தனையும் கரங்கூப்பி நின்றீரே
நாங்கள் இங்கு வரும் போதெல்லாம்
நாவினிக்க உணவு தந்து நலம் விசாரிப்பீரே
அத்தானே என் அத்தான் உங்கள் அன்பை
எப்பிறவியிலே காண்போம் நாம்...............

**அன்பு மைத்துனர்**
**திரு. திருமதி ச. சிவநாதன் குடும்பம் (கனடா)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் திரு மனதிலிருந்து....

எங்கள் குடும்பத்தின் முதல்வரய் பிரவேசித்தார் அத்தான்
எனக்கு அவர் ஒரு ஆசான் சகிப்புத்தன்மையை நான்
அவரிடம் இருந்து கற்றபாடம்.
பொறுமை தாழ்மை அமைதியான அறிவுரை விட்டுக்கொடுப்பு
கொடையில் ஒரு வள்ளல் சூழல் அறிந்து செயல்படும் ஆற்றல் என
அவரிடம் இருந்து நான் கற்றது அனேகம்.
கடின உழைப்பு திட்டமிட்ட பொருளாதர ஆற்றல் அன்பு பண்பு
எல்லோருக்கும் பிரதிபலனை எதிர்பார்க்காத உதவி
எனதக்காவுக்கு கிடைத்த நல்ல கணவர்
எங்கள்குடும்பத்தின் முதல் முத்து
இப்படியொரு உறவை இனி என் வாழ்வில்
எங்கு நான் பெற்றிடுவேன்.ஆண்டவா......

**கண்ணீருடன் திரு.**

## பெறாமக்கள் புலம்பல்

அறியாத வயதிலே அன்னையை நாமிழந்தோம் – அந்த
வலியே தெரியாமல் எமை வளர்த்த பெரியப்பா
எங்கே போனீர்கள்
உழைப்பு உயர்வு இதை உங்களிடம் தான் கற்றோம்
ஆலமரமாய் எம் குடும்பத்துக்கு
நிழல் தந்த விருட்சம் நீங்கள்
இன்று எம்மை நிர்க்கதியாய் தவிக்க விட்டு
நின்மதியாய் போன தெங்கே
சொந்த பிள்ளைகளைப் போல் பாசமுடன் எம்மை
அழைத்த குரலை எப்போது
நாம் கேட்போம் உங்களை
எப்பிறப்பில் நாம் காண்போம்.

**பவானி குடும்பம், வேலணை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போனது எங்களின் பெரு விருட்ஷம்

விழுதெறிந்த விருட்ஷ மொன்று
வேரிழந்து சாய்ந்தது - இந்த
வேதனையால் அழும் நெஞ்சம்
கோடி கோடி ஆனது
கடமையது வாழ்வு என்றே
காலமெல்லாம் வாழ்ந்தவர்
காலனடி சேரும் போதும்
உழைப்போடு இருந்தவர்.

ஓடி ஓடி உழைத்து இந்த
ஊர் சிறக்க வாழ்ந்தவர்
உண்மையான துன்பமெனறால்
உதவுவதில் வல்லவர்
எம்மைத் தந்த தெய்வங்களிற்கு
இவர் மூத்த மருமகன்
எந்த நல்ல செயல்களுக்கும்
இவர் முன்நிற்கும் நல்லவன்

சிறுக சிறுக சேர்த்த பணத்தில் - எனது
திருமணம் செய்து வைத்து
எம் பிள்ளைகளின் மண நாளை
முன்னின்று நடத்தி வைத்து
விரிந்த வானில் சிறகடித்து
விண்ணை நோக்கி பறந்ததேன்
எமை அழுது அழுது நோகவைத்து
ஆலமரம் சாய்ந்ததேன்.

**மாலினி குடும்பம், வவுனியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை அத்தான் போனதெங்கே.....

அத்தான் போல் இல்லாது
அண்ணனாகத் தான் இருந்து
அன்பாய் வழிநடத்தி
அறிவுரைகள் பல சொல்லி
தந்தையைப் போல எம்மையும்
தாங்கிய தெய்வமே
உம்மை எப்பொழுது காண்போம்
நாம் எப்பொழுது காண்போம்

மனைவி வழி உறவுகளை
மகிழ்வாக உபசரிக்கும்
மனப்பாங்கு மண்ணுலகில்
எவர்க்கு வரும் நான் கானேன்
அரவணைப்பில் தாய் போல
அன்போடு எமைக்காத்தீர்
பொன் மனம் கொண்டதனால்
பொன்குமார் நாமமோ

உங்கள் புன்னகை முகம் காண
ஏங்கிறது உள்ளம்
களங்கமில்லா உங்கள் அன்பை
யாரிடம் தேடுவது
தொலைதூரம் சென்று
எமைத் துன்பத்தில் விட்டு விட்டீரே
எமக்கு எல்லாவற்றையும் பார்த்து பார்த்து செய்தீரே
உம் பிரிவைத் தாங்கும்
மனத்தையும் நீரே தந்தவிடு

உதிர்ந்த சருகொன்று உணர்த்துவது ஒன்றே ஒன்று தான்
நம் வாழ்வில் எதுவும் நிரந்தமில்லையென்று இருக்கும் வரை
அன்பாக நிரந்தரமாக இருப்போம்.

**அன்னாரின் ஆத்மா சாந்தி**
**இறை நிழலில் இளைப்பாறப் பிரார்த்திக்கும்**
திருமதி வாசுகி ரட்ணம் குடும்பத்தினர் (பிரான்ஸ்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் மைத்துனிமார் புலம்பல்

நீ நடந்த தெருவெல்லாம்
அமைதி யானது
நின் உருவே எம் கண்ணில்
நிழலாடுது
நேற்றிருப்பார் இன்றில்லை
நியது உண்மை தான்
அந்த நிலமை எமகென்றால்
பெரிதும் துன்பம் தான்
மைத்துணரே உம் இழப்பு
துன்பம் துன்பம் தான்
வாழும் போது மற்றவர்க்கு
வழிகாட்டி நீ
விட்டு வீழ்ந்து போன
எம் உறவு பெருவிருட்சம் நீ
ஆடம் ஈசன் பாதத்தில்
அமைதியாய் இளைப்பாற
வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - அதை நழுவ விடாதீர்கள்
வாழ்க்கை ஒரு பயணம் - அதை சென்று மகிழுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு வெகுமதி - அதை ஏற்றுக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போட்டி - அதில் வெற்றி பெறுங்கள்
வாழ்க்கை ஒரு கலை - அதை அழகு படுத்துங்கள்
வாழ்க்கை ஒரு வேதனை - அதை தாங்கிக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சவால் - அதை எதிர் நோக்குங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் - அதற்கு மனம் தளராதீர்கள்
வாழ்க்கை ஒரு பிரச்சினை - அதற்கு தீர்வு காணுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலமரம் சரிந்ததுவே....

அன்பாலும் பண்பாலும் கட்டிப் போட்டீர்கள்
அரவணைப்பால் எங்களையும் வாழச் செய்தீர்கள்
ஆறென்றும் இல்லாமல் அர்ப்பணிப்புடன் வளர்த்தீர்கள்
அப்பா என்றும் அழைக்கலாம் எங்கள் மாமா.

தந்தையில்லாத் துன்பம் போக்கி எமை வளர்த்தீர்கள்
தானும் தந்தை போல அறிவுரைகள் எமக்களித்தீர்கள்
குழந்தையாக வந்த எங்களை குதூகலிக்க செய்தீர்கள்
குறைகளேதும் வந்திடாமல் உபசரித்தீர்கள்.

வேணும் என்ற பொருள் எல்லாம் வேண்டித் தந்தீர்கள் – எங்களை
வெளிக்கிடும் போதெல்லாம் கூட்டிச் செல்வீர்கள்
இலங்கை தன்னை சுற்றிப் பார்க்க வழிசமைத்தீர்கள்
இந்தியாவும் சென்று வரலாம் என்று சொன்னீர்கள்
இனி எமக்கு யார் இருக்கார் இத்தனையும் செய்ய
தனிமையிலே விட்டீர்கள் எங்கள் மாமா

வைசு வைசு என வாயவிட்டு கூப்பிடுவீர்கள்
சங்கு எங்கே என சண்டை செய்வீர்கள்
உங்கள் குரல் கேட்காமல் எங்கள் மனம் பதறுகிறது
எங்கே போனீர்கள் வாரீரோ எங்கள் மாமா

உங்களுக்கு நீங்களே ஹீரோ என்றீர்கள்
எங்களுக்கும் நீங்களே தெய்வம் என்றோமே
எத்தனையோ ஆலோசனைகள் எமக்கருளினீர்கள்
அத்தனையும் நெஞ்சினிலே பதிந்திருக்கிறது மாமா
எத்தனை நாள் சென்றாலும் உங்கள் நினைவு ஆறாது
காத்திருக்கிறோம் உங்கள் வருகைக்காக ...

**சி.வைஷ்ணவி**
**சி.சங்கவி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வட கிழக்கு
கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
Jaffna Vannarpannai North - East
Kaladdy Verakaththi Vinayagar Temple

சிவஸ்ரீ. து. விவேகானந்தக் குருக்கள்
Siva Sri. T. Vivekanantha kurukkal

T.P -

12, சீனியர் ஒழுங்கை,
கலட்டி,
யாழ்ப்பாணம்.
12, Seniyar Lane,
Kalddy,
Jaffna..

## பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமான
## சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள அவர்களின் ஆத்மசாந்திப்
## பிரார்த்தனை உரை

தனக்கென வாழா பிறர்க்கென வாழ்ந்தவர் அமரர் பொன்குமார் பிறரது துன்பங்களை தனதாக ஏற்றுக் கொள்ளும் உத்தமர். இளமைக் காலம் தொடங்கி வாழ்நாள் முழுவதும் ஓர் தேனியைப் போல சுறுசுறுப்புடன் உழைத்தவர். தன்னையும் குடும்பத்தவரையுமல்லாமல் அயலவரையும் நேசிக்கும் பண்பாளர். ஆன்மீக விடயங்களில் எப்பொழுதும் முன்நிற்பார். வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சுற்று பிரகாரத்தில் மகாலட்சுமி அம்மன் சந்நிதி அமைத்துத்தந்து இரண்டு கும்பாபிஷேகங்களின் போது தனது உபயமாக ஏற்று நடத்தினார் அத்துடன் விநாயகர் விரதகால கணபதி ஹோம விழாவை பக்தி பூர்வமாக செய்விப்பார்.

ஒவ்வொரு தமிழ்ச்சித்திரை வருடப்பிறப்பின் போதும் தனது வெதுப்பக வாகனத் திறப்புக் கோர்வைகள் மற்றும் தன் அன்புக்குரியவர்களுக்கு கொடுப்பதற்கான கை விஷேச நாணயங்களை விநாயப் பெருமானின் பூஜையில் வைத்தே எடுத்துச் செல்வார். எவ்வளவு வசதி வாய்ப்புக்கள், கடைகள், இல்லங்கள் இருந்தாலும் பெருமைகள் அற்ற உதாரண புருஷராக வாழ்ந்தார் இறுதி மூச்சுவரை ஓடிக்கொண்டே இருந்தார். அளவான புன்சிரிப்பு, கதையும் அப்படியே அதனால் தான் பெற்றோர்கள் பொன்குமார் என பெயர் சூட்டினார்களோ. அவரது பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அமரரின் பிரிவால் துயருரும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் வெதுப்பக பணியாளர்கள் எல்லோருக்கும் ஆறுதல் சொல்லி அமரரின் ஆத்மா தில்லைக்கூத்தன் பாதார விந்தங்களில் சாந்தி அடையுமாறு அடியேன் தினமும் அர்ச்சிக்கும் வீரகத்திப் பிள்ளையாரை வேண்டிக்கொள்கிறேன்.
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானமே கூரையாகக் கொண்டு அருள்பாலிக்கும் திருச்சி உறையூர் வெக்காளியம்மன்



அன்னை பராசக்தியின் அவதாரங்களில் முக்கியமானது காளி அவதாரமாகும் உறையூரில் வெக்காளி அம்மனாய் யோக பீடத்தில் அமர்ந்து கம்பீரமாக காட்சி தருகிறாள் ஒரு கரத்தில் திரிசூலம் ஒரு கரத்தில் உடுக்கை மறுகரத்தில் பாசம் இன்னொரு கரத்தில் அட்சய பாத்திரம் என நான்கு கரங்களைக் கொண்டிருக்கிறாள். கழுத்தில் திருமாங்கல்யம், முத்தாரம், அட்டிகை, தலையில் பொன்முடி கையில் வளையல்கள் அணிந்திருக்கிறாள் பீடத்தில் வலது காலை மடித்து இடது காலை அசுரன் மீது பதியவைத்தும் அருள் பாலிக்கிறாள் இடுப்பிலே யோக பட்டமும் அணிந்திருக்கிறாள் பொதுவாக அம்மன் இடது காலை மடித்து வலது கால் அசுரன் மீது பதிவுமாறு அமர்ந்திருப்பாள் ஆனால் வெக்காளி அம்மனோ வலது காலை மடித்து இடது கால்ப் பாதத்தை அசுரன் மீது பதிய வைத்திருப்பது அபூர்வகாட்சியாகும்.

**தலவரலாறு**

முன்னொரு காலத்தில் சாரமாமுனிவர் என்பவர் திருச்சி தாயுமானவர் சுவாமிக்கு பூசை செய்வதற்காக உறையூரில் நந்தவனம் அமைத்து எம் பெருமானை பூஜித்து வந்தார் பூக்களை கொய்து மாலையாக்கி எம் பெருமானுக்கு சமர்ப்பித்து வந்தார். இந்நிலையில் பூ வணிகன் ஒருவன் அந்தப் பகுதி மன்னனை மகிழ்விப்பதற்காக நந்தவனத்து மலர்களைத் திருட்டுத் தனமாக பறித்து கொடுத்து வந்தான் ஒரு நாள் இதனைக் கண்ட முனிவர் மன்னனிடம் போய் முறையிட்டார் மன்னனோ முனிவரின் புகாரைப் புறக்கணித்ததோடு அல்லாமல் வணிகனை ஊக்குவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மனம் உடைந்து போன சாரமாமுனிவன் திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்ற திருவாக்கிக்கு அமைவாக தாயுமான சுவாவமிகளிடம் தனது குறைகளைச் சொல்லி அழுது தொழுதார். தனக்கு நேரும் குறைகளைக் கூடப் பொறுத்துக் கொள்ளும் பரம்பொருள் தன் அடியவர்கள் படும் துயரைத் தாங்கி கொள்ளவே மாட்டார் என்பது நிதர்சனமான உண்மை முனிவரின் துன்பத்தை கேட்ட தாயுமான சுவாமி கிழக்கு நோக்கி அமர்ந்தவர் மேற்கு நோக்கி திரும்பி கோபக் கனல் கொண்ட உக்கிரப் பார்வையால் உறையூரில் மண்மழை பொழியச் செய்தார் மண்மழையால் அங்கு வசித்த மக்களின் வீடுகள் அழிந்து போயின மக்கள் செய்வதறியாது திகைத்து அனைவரும் வெக்காளி அம்மனிடம் சரண் புகுந்தனர்.

அன்னை வெக்காளி தன் அடியவர்களுக்காக தாயுமானவரிடம் வேண்ட மண்மாரி பொழிவது நின்றது ஆனாலும் மக்கள் வீடிழந்து நின்றனர் அடியவரின் துயர்கண்டு வருந்திய அன்னை உங்களுக்கு வீடு கிடைக்கும் வரை நானும் வெட்ட வெளியிலே வாழ்வேன் எனச் சபதம் செய்து வானமே கூரையாகக் கொண்டு வாழத் தொடங்கினாள் இங்கு இன்றளவும் வீடற்றவர்கள் வாழ்வதால் அன்னை தன் சத்தியப்படி வெட்ட வெளியில் வாழ்ந்து வருவதாக தலவரலாறு சொல்கிறது.

வெக்காளியம்மனை வழிபட்டால் திருமணத்தடை நீங்கும் கடன் தொல்லை தீரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்
# காரிய சித்திமாலை



பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுவதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும்பொருள் எவன்அவ்
உலகிற்பிறக்கும் விகாரங்கள் உறாதமேலாம் ஒளியாவன்?
உலகம்புரியும் வினைப் பயனை ஊட்டும் களைகண்எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீழும் பஞ்செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்மாகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில் ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப் புரிந்து சரணம் அடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகை ய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்கு பர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன் எவன் எண்குணன் எவன் அப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம்அடைகின்றோம்

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன் வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசுஅறிவில் பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம் அடைகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர பதிகம்



பண்:நட்ட பாடை

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவுழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்நல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே.

கரையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சரப் பதிகம்



திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 2

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகமுன் கலந்தவர் மதின்மேற்
தனித்தபே ருருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3

பழித்திளங் கங்கை சடைமுடி வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வுங்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 8

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 9

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடும்உட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோண்மா மலையமர்ந் தாரே. 10

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு



முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

**வேண்டுதற்கூற்று**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணீயல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொளிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முக கவசம்



அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருளது ஆகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகள் அறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற என் அருள் ஈசன் ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாது அவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசு இலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க

இரு செவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிசு அறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச்சிவ சுப்பிரமணியன் காக்க

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசுஇலா மார்பை ஈர ஆயுதன் காக்க எந்தன்
ஏசுஇலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக் கோன் காக்க

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண்ஏறிடவே என்கைத்தலத்தை மாமுருகன் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறம் கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன் காக்க பின் முதுகைச் சேய் காக்க

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்திர்யோன் காக்க வம்புத்
தோள் நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க, குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க, பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண்நேர ஆசான் திமிருமுன் தொடையைக் காக்க

ஏரகத் தேவன் என்தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க

ஐயுறு மலையன் பாதத்துத் அமர் பத்துத் விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன் அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும் ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சை க் காக்க

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள் இராக்கதப் பேய் பலகணத்துத் எவை ஆனாலும்
கிரிகொள் எனைவேல் காக்க கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணியில் வேல் சூலங்களும்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டிட் யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சிச் ன்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கை வேல் காக்க காக்க

ஒளவியமுளர் ஊன் உண்போர் அசுர்பேர் ய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கர் ள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவாராயின் சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கை அயில் காக்க காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோணாய் குரங்கு கோல மார்ச்ர் சாச் லம் சம்பு
நடையுடை எதனாலேனும் நான் இடர்ப்ர் ப் ட்டிட டாமல்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முளை வேல் காக்க

ஈங்கரமே போல் தழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஒந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சிச்
உகமிசை இவையால் எற்கு ஓர் ஊறுஇலாது ஐவேல் காக்க

சலத்தில் உய்வன் மீன்ஏறு தண்டுடைத் திருக்கை மற்று
நிலத்திலும் சலத்திலும் தான் நெடிந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால் நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துத் டன் இருந்து காக்க பாவகி கூர்வேர் ல் காக்க

ஞமலியம் பரியன் கை வேல் நவக்கிரகக் கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்த சூலை, ஆக்கிராணரோகம்
திமிர்கழர் வாதம், சோகை சிரமடி கர்ணர் ரோகம்
எமை அணுகாமலே பன்னிரு புயன் சயவேல் காக்க

டமருகத்துத் அடிபோல் நைக்கும் தலையிடி கண்ட மாலை
குமுறு விப்புருதி குன்மம் குடல்வரி ஈழை, காசம்
நிமிரொணா(து) இருத்துத் வெட்டை ட் நீர்ப்ர் ப்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கை வேல் காக்க

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கை கால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம் மூலவெண்முளை தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்தப்
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும் சத்திவடி வேல் காக்க

தவனமா ரோகம் வாதம் சயித்தியம் அரோசகம்
சுவறவே செய்யும் மூலச்சூடு, இளைப்பு, உடற்று விக்கல்
அவதி செய் பேதி, சீழ்நோய் அண்டவாதங்கள் சூலை
எவையும் என்னிடத்துத் எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்ர் த்திடு கருமை வெண்மை ஆகுபல்தொழு நோய்க்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப் பகந்தர் ஆதி
இமைப் பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க

பல்லது கடித்துத் மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டிட் யே உருட்டிட் நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க

மண்ணிலும் மரத்தின் மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும் சாரி செய் ஊர்திர் மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்துத் ம் என்னை
நண்ணிவந்து அருள்ஆர் சஷ்டி நாதன் வேல் காக்க காக்க

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல் முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்வின் காக்க
சக்ரமோடு ஆறும் ஆனோன் தன் கை வேல் நடுவில் காக்க
சிகரமின் தேவமோலி திகழைவேல் கீழ்மேல் காக்க

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க அங்கி
விஞ்சிடு திசை யின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர் காமத்தோன் இகலுடைக் கரவேல் காக்க

லகரமே போல் காளிங்கன் நல்லுடல் நெளிய நின்று
தகரமர்த்ர் த்தனமே செய்த சங்கரி மருகன் கை வேல்
நிகழ் எனை நிருதி திக்கில் நிலைபெறாக் காக்க மேற்கில்
இகல் அயில் காக்க வாயு வினில் குகன் கதிர்வேல் காக்க

வடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கை யில் இருக்கும் ஞான்றும் நவில் கையில் நிமிர்கைர் கையில் கீழ்க்
கிடக்கை யில் தூங்கும் ஞான்றும் கிரிதுளைத்துத் ளை வேல் காக்க

இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தை யனார் கை வேல்
வழங்கும் நல்ஊன் உண்போதும் மால்விளையாட்டின் போதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும் குணத்தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை, முன் எல், ஓம் சிவசாமி காக்க
தெளிநடு பிற்பகல்கால் சிவகுரு நாதன் காக்க

இறகுடைக் கோழித் தோகை க்கு இறை முன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்கை த்தே திகழ் பின் இராவில் காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழ குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க

இனம் எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவணபவனார் காக்க
நனி அனுபூதி சொன்ன நாதர் கோன் காக்க, இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள் தான் காக்க வந்தே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



தொல்லை இலும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கொளியாய்,
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரானே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய் (80)

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று (85)

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே (90)

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. (95)

திருச்சிற்றம்பலம்!!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பனின் நூற்றெட்டு சரணக் கோவை



மாலை அணிந்த ஸ்வாமிமார்கள் இந்த சரண கோஷத்தை தினமும் காலை,மாலை இரண்டு வேளையும் நீராடிவிட்டு ஐயப்பனிற்கு பால், பழம்,கற்கண்டு முதலியவற்றை நிவேதனம் செய்து சரணம் சொல்லி வழிபடவேண்டும்.

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச்சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப்பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினைகள் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப்பங்காளனே | சரணம் ஐயப்பா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா
ஓம் ஒளிரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா
ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஓதும் மறைபொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஒளடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுகவரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன்மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவவைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோவில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப்புழைப் பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணிகண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம்நிறை மெய்ப்பொருளே சரணம்ஐயப்பா
ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலை கொணர்ந்தவளே சரணம்ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம்ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | இருமுடிப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எருமேலி தர்மசாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம்ஐயப்பா |
| ஓம் | சாஸ்தாவின் நந்தவனமே | சரணம்ஐயப்பா |
| ஓம் | சாந்திதரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேருத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேதமையை ஒழிப்பவனே | சரணம்ஐயப்பா |
| ஓம் | காளைகட்டி நிலையமே | சரணம்ஐயப்பா |
| ஓம் | அதிர்வேட்டுப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அழுதமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆனந்தமிகு பஜனைப்பிரியனே | சரணம்ஐயப்பா |
| ஓம் | கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இஞ்சிப்பாறைக்கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரியிலந்தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஸ்ரீராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சக்திபூஜைக் கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீபஜோதித் திருஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தென்புலத்தார் வழிபாடே | சரணம்ஐயப்பா |
| ஓம் | திருபம்பையின் புண்ணியமே | சரணம்ஐயப்பா |
| ஓம் | நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சிமேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக்குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண் சாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்தசாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராஜாப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புறத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினிக் குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குருநாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகரஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்களமூர்த்தியே சரணம் ஐயப்பா


ஓம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாரடைப்பு என்றால் என்ன ?
# உடனடியாக செய்யவேண்டியது என்ன ?





இன்று நாம் பார்க்க இருப்பது மாரடைப்பைப் பற்றி. உலக அளவில் பெரும்பாலான மக்கள் என்ன காரணத்தால் இறக்கிறார்கள் ? உங்களுக்கு நான் 4 விடைகள் தருகிறேன். சிந்தித்துப் பதில் அளியுங்கள்.

முதலாவது சாலை விபத்து அல்லது வன்முறை சம்பந்தமான இறப்புகள்.
இரண்டாவது கேன்சர்.
மூன்றாவது இருதயம் சம்பந்தமான நோய்கள்.
நான்காவது நுரையீரல் மற்றும் கிட்னி சம்பந்தமான நோய்கள்.

உங்களில் அதிகம் பேர் நினைக்கக் கூடியது சரியே. இருதயம் சம்பந்தமான நோய்கள் தான் சரியான விடை, அதிலும் குறிப்பாக மாரடைப்பு.

இது பெரும்பாலும் தடுக்கக் கூடியது. மாரடைப்பு, என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். உடலில் எந்த பாகமும் உயிர்ப்போடு இருக்க வேண்டுமென்றால் அதற்கு போதுமான ரத்தம் தேவை.

உதாரணத்திற்கு உங்கள் கையை எடுத்துக் கொள்ளுங்கள். அதை இறுக்க மூடி மணிக்கட்டில் இன்னொரு கையை வைத்து அழுத்துங்கள். இப்படி செய்யும்போது அந்த விரல்களுக்கும் உள்ளங் கைக்கும் தேவையான ரத்தம் செல்லாது. இப்போது மூடிய அந்தக் கையை விரித்து பார்ப்போமானால் அது வெளிறிப் போய் இருக்கும்.

நீங்கள் அவ்வாறே இறுக்கிப் பிடித்தது போல் இரண்டு நிமிடம் இருந்தீர்களானால், உங்களால் கையை அசைக்க முடியாது. அதுவே ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி நேரம் கழித்து பார்த்தீர்கள் என்றால் உங்கள் கைகளில் நீலம் படர்ந்திருக்கும். அதுவே ஒன்றரை மணி நேரம் கழித்து பார்ப்போமானால், உங்கள் கைகளில் உள்ள ஒவ்வொரு செல்களும் இறந்திருக்கும். அவ்வாறு செல்கள் இறக்கும் முன் நீங்கள் இறுகப் பற்றி இருந்த கையை விட்டீர்கள் என்றால் உங்கள் உள்ளங்கைகளுக்குள் மீண்டும் ரத்தம் ஓட ஆரம்பித்துவிடும், கையானது சிவப்பு வண்ணத்திற்கு மீண்டும் மாறி உயிர் பிழைத்து விடும்.

உடம்பில் உள்ள அனைத்துப் பாகங்களும் இரத்தத்தினால் தான் உயிர் வாழ்கின்றன. இரத்தம் இல்லை என்றால் அந்தப் பாகத்திற்கு உயிர் இருக்காது. உடல் முழுவதும் இரத்தத்தை அனுப்புவது இதயம்தான். ஆனால் இதய தசைகளுக்கும் இரத்தம் தேவைப்படுகிறது. அந்த இதயத் தசைகளுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்வதற்காகவே சில இரத்தக் குழாய்கள் இருக்கிறது. நரம்பு என்பதன் பொருள் நரம்பு மண்டலம். எனவே நாம் அந்த வார்த்தையை உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இரத்தம் கொண்டு வரும் இரத்தக் குழாய்களை நாம் தமனி எனக் கூறுவோம். இந்த தமனி என்ற இரத்தக் குழாய்தான் உடல் முழுக்க இரத்தத்தைக் கொண்டு செல்கிறது. இந்த இதயத்துக்கு இரத்தத்தைக் கொண்டுவரும் தமனி அடைபடுவதால் உண்டாவதுதான் ஹார்ட் அட்டாக். அதாவது மாரடைப்பு.

இருதயம் துடிக்கும்போது, இருதயத்தின் மேல் உள்ள அந்த மகா தமனி மூலமாய் இரத்தம் உடல் முழுக்க பாய்கிறது. இந்த மகா தமனியில் இருந்தே இரண்டு குழாய்கள் இருதயத்துக்கு வருகிறது. ஒன்று வலது பக்கத்திலும் மற்றொன்று இடது பக்கத்திலும் வருகிறது. இடது பக்கத்தில் வரும் அந்த இரத்த குழாய் இரண்டாகப் பிரிகிறது ஒன்று முன்புறமும், மற்றொன்று பின்புறமும் வருகிறது. இந்த மூன்றும்தான் இதயத்துக்கு இரத்தத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது இந்த இரத்தக்குழாயின் இறுதி பாகம் பாதிக்கப்பட்டால், அந்த ரத்தக்குழாயைச் சுற்றியுள்ள பாகங்களுக்கு இரத்தம் பரவாது. அதனால் அந்தத் தசைகள் பாதிக்கப்படும். இதுவே இரத்தக்குழாய் நடுவில் பாதிக்கப்பட்டால் அந்த இரத்தக்குழாயை சுற்றி உள்ள பெரிய அளவிலான தசைகள் பாதிக்கப்படும். இதுவே அந்த இரத்தக்குழாய் தொடக்கத்திலேயே அடைபடுமானால், அந்த இரத்தக்குழாயை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றியுள்ள முழுமைமான தசைகளும் பாதிக்கப்படும். இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இரத்தக்குழாய் அடைப்பு இடத்தைப் பொறுத்து இந்த பாதிப்பானது மாறுபடும்.

ஒரு தமனியின் இறுதியில் அடைப்பு ஏற்படுமானால் அப்போது பாதிப்பு குறைவாக இருக்கும் அதுவே ஆரம்பத்தில் அடைபடுமானால் பாதிப்பு அதிகமாக இருக்கும். இன்னும் சில பேருக்கு இந்த இந்த தமனிகளை சுற்றியுள்ள அதன் கிளைகளில் அடைப்பு ஏற்படும். அப்படி கிளைகளில் அடைப்பு ஏற்படும்போது அந்த கிளைகளை சுற்றியுள்ள தசைகள் மட்டுமே பாதிக்கப்படும். எந்த குழாய்களில் அடைப்பு ஏற்படுகிறது அந்தக் குழாய் எந்த அளவிலான தசைகளுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்கிறது என்பதைப் பொறுத்துதான் நாம் சிறிய அளவிலான அடைப்பு அல்லது பெரிய அளவிலான மாரடைப்பு என்று கூறுகிறோம். அதுவும் முழுவதுமாக சரி கிடையாது. அதை நாம் பின்னர் பார்ப்போம்.

இரத்தக்குழாயின் இறுதி இடங்களில், அடைப்பு இருந்தால் ஒருவர் எளிதில் பிழைத்துக் கொள்வார். ஆனால், அந்தத் தசைகள் மட்டும் செயலிழந்து போகும். அவருக்கு அதிக வலியைக் கொடுக்கும். அதுவே நாம் மாற்று மருந்து கொடுக்கும்போது அவர் உடல் நலம் தேறி விடுவார். இதுவே இரத்தக்குழாயின் ஆரம்ப இடத்தில் அடைப்பு ஏற்பட்டிருக் குமாயின், அவர் இறக்கும் வாய்ப்பு அதிகம். பெரிய அளவிலான தசைகள் பாதிக்கப்பட்டதால், அவர் வாழ்நாள் முழுக்க மாத்திரை மருந்துகளை உட்கொள்ள வேண்டி வரும்.

எனவே நாம் சுருக்கமாக புரிந்து கொள்ள வேண்டியது இதைத்தான் மாரடைப்பு என்பது இதயத்தில் உள்ள ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் வருவது. அது எந்த இடத்தில் அடைப்பு ஏற்படுகிறது என்பதை பொறுத்து மாரடைப்பின் தன்மையானது மாறுபடும்.

இப்போது நாம் மூன்று நபர்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். முதல் நபருக்கு ஏற்கனவே இரத்த குழாயில் 30% அடைப்பு உள்ளது. இரண்டாம் நபருக்கு 70% அடைப்பு உள்ளது. மூன்றாம் நபருக்கு 90% அடைப்பு உள்ளது என வைத்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முதலில் எடுத்துக் கொண்ட 30% அடைப்புள்ள நபருக்கு எந்த விதமான பாதிப்பும் தென்படாது. அவர் இயல்பான மனிதரைப் போல் ஓடி, ஆடி தனது அன்றாடப் பணிகளை செய்த வண்ணம் இருப்பார்.

இதுவே 70% அடைப்பு உடைய நபர் மாடிப்படி ஏறும்போது அல்லது கடினமான வேலைகள் செய்யும் போது, அவருக்கு சிறிது களைப்பு ஏற்படும். ஆனால், சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு திரும்பி அவர் தன் பணிகளைத் தொடர்வார். எனவே இவரது அன்றாடப் பணிகளிலும் பெரிய அளவிலான மாறுபாடுகள் எதுவும் தென்படாது.

90% அடைப்புள்ள நபருக்கும் மாறுபாடுகள் தென்படும். ஆனாலும் அவர் சிறிது நேரம் ஓய்வெடுத்து அல்லது அதைப் பொருட்படுத்தாது தனது அன்றாடப் பணிகளை மேற்கொண்டவாறு இருப்பார். இதற்குக் காரணம் இந்த மூன்று நபர்களுக்கும் இரத்த ஓட்டம் அடைபடாமல் பாய்ந்து கொண்டுதான் உள்ளது.

இரத்த ஓட்டம் தடைபடாமல் உள்ளதால், எந்தவித பாதிப்பும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இவர்களுக்கு நாம் ECG மருத்துவ பரிசோதனை செய்து பார்த்தோமேயானால், அதில் எந்தவித குறைபாடும் தென்படாது. ஒரு விதமான ஜவ்வு இருக்கும். அதுதான் இரத்தத்தையும் அடைப்பையும் பிரிக்கிறது. இந்த ஜவ்வில் ஏதேனும் விரிசல் அல்லது கிழிசல் ஏற்படுமாயின் இரத்தமானது அதில் படரப் பார்க்கும்.

உதாரணத்திற்கு, நமது கையில் அடிபட்ட இடத்தில் இரத்தம் கசிகிறது என்றால், நாம் கையை வைத்து அந்த இரத்தத்தை அடைக்கப் பார்ப்போம். அவ்வாறு கையை வைத்து மூடும்போது ஏன் இரத்தம் வருவது நிற்கிறது என்றால், நமது உடலில் எப்போதெல்லாம் இவ்வாறு ஜவ்வு அல்லது சதைகள் பாதிப்புக்குள்ளாகிறதோ அப்போதெல்லாம் அந்த இடங்களில் இரத்தமானது சிறிய சிறிய இரத்த கட்டிகளாக மாறி படர்ந்து நிற்கும் இவ்வாறு நிற்கும்போது இரத்தமானது வெளியேறுவது தடுக்கப்படுகிறது. இதுதான் இயற்கை.

இதேபோல் நமது ரத்தக் குழாயில் ஏற்பட்டுள்ள அடைப்பின் மீதும் படர்ந்துள்ள ஜவ்வானது கிழியும் போது, அதில் நமது இரத்தமானது படர்ந்து அந்தக் கிழிஞ்சல்களை அடைக்க பார்க்கும். இவ்வாறு இரத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியானது மேலும் படர்ந்து படர்ந்து முழு அடைப்பை உண்டாக்கிவிடும். எனவே நாம் முதலில் பார்த்த 30% மட்டுமே அடைப்புள்ள நபர் எந்தவித பாதிப்பும் இல்லாமல் நன்றாகத்தான் இருந்தார். ஆனால் அவருக்கு ஜவ்வானது கிழியும்போது இரத்தமானது படர்ந்து அடைப்பு ஏற்பட்டு முழு விதமான அடைப்புக்கு வழி செய்து, பெரிய அளவிலான மாரடைப்பின் விளைவுக்கு வந்து நிற்கிறார். இந்த வகையான பாதிப்பானது மூன்று நபர்களுக்கும் பொதுவான ஒன்று. அதேபோல் மாரடைப்பும் இந்த மூன்று நபர்களுக்கும் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு.

எனவே மாரடைப்பு ஏற்படும் முன்பு அவருக்கு 30, 60, 90 என எந்த சதவீதத்திலும் அடைப்பானது இருந்திருக்கலாம். ஆனால் அப்போதெல்லாம் அவருக்கு மாரடைப்பு ஏற்படாது. எப்போது மாரடைப்பு ஏற்படும் என்றால், அது 100% எட்டும்போது தான்.

இதை எப்படித் தடுப்பது ? இந்த மூன்று நபர்களுக்கும் பொதுவான பாதிப்பு என்பது இரத்தக்கட்டிகள் ஏற்படுத்தியதுதான். இந்த இரத்தக் கட்டிகளை நாம் கரைத்து விட்டோமேயானால், இரத்தமானது இயல்பாகப் பாய ஆரம்பித்துவிடும். மறுபடியும் அவர்கள் பழைய நிலைக்குத் திரும்புவார்கள்.

ஆனால், அதிலும் ஒரு பிரச்சினை உள்ளது. இந்த இரத்தக் கட்டிகள் ஆரம்பத்தில் உருவாகும்போது மிகவும் மெல்லியதாக இருக்கும். பின்னர் கடினமானதாக மாறும். அதுவே 3 மணி நேரம் கழித்துப் பார்ப்போமானால் மிகவும் கடினமானதாக மாறிவிடும். எனவே இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது, எவ்வளவு விரைவாக நாம் இரத்தக் கட்டிகளை கரைக்க மருந்துகளை உபயோகப்படுத்துகிறோமோ, அவ்வளவு விரைவாக இந்த இரத்தக் கட்டிகள் எளிதாகக் கரையும். இப்போது ஒரு நோயாளி இரத்தக்கட்டிகள் உருவாகிய ஒரு மணி நேரத்துக்குள் வருகிறார் என்றால், உடனடியாக அவருக்கு நாங்கள் சிகிச்சை அளிப்போம். அவர் அரை மணி நேரத்திற்குள் சரியாகி விடுவார்.

இதுவே அவர் இரண்டு, மூன்று மணி நேரம் கழித்து வருகிறார் என்றால், இந்த இரத்தக் கட்டிகளை கரைக்க நாம் சிரமப்பட வேண்டியிருக்கும். ஆகவேதான் வலி ஏற்படும்போது உடனடியாக நாம் வரவேண்டும் எனக் கூறுகிறோம். அதைப்பற்றி நாம் பின்னர் பார்ப்போம்.

இதற்குத் தேவையான மருந்தானது எல்லா அரசு மருத்துவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைகளிலும் உண்டு. ஒரு பத்து அல்லது இருபது படுக்கையில் மட்டுமே கொண்ட தனியார் மருத்துவமனைகளிலும் கூட நாம் இந்த மருந்தைக் காண முடியும். எனவே நெஞ்சு வலியோடு வருபவர் மாரடைப்பு உள்ளதா என்று பார்க்க ஒரு மருத்துவப் பரிசோதனை செய்துவிட்டு, இந்த ரத்தக் கட்டிகளைக் கரைக்க சரியான, முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மருந்துகளிலும் இரண்டு முதல் மூன்று வகையான மருந்துகள் உள்ளன. இந்த இரத்தக் கட்டிகளை கரைக்கும் மருந்தானது, 100 பேருக்கு செலுத்தினால் 50 முதல் 70 பேருக்குத்தான் இது சரியாக வேலை செய்யும். மீதி உள்ள நபர்களுக்கு நாம் மருந்தை செலுத்தி இருப்போம். ஆனால், இந்த ரத்த கட்டியானது அதில் கரையாமல் இருக்கும். அப்படி கரையாமல் இருக்கும் பொழுது, இருதயமானது சரியாக இயங்க வாய்ப்பில்லை. அந்த நபர்களுக்கு இவ்வாறு மருந்தை செலுத்தி சரியாகவில்லை என்று தெரிந்தபின் ஆஞ்சியோபிளாஸ்டி செய்வோம்.

எனது துறையில் உள்ள மருத்துவர்கள், இத்தகைய இரத்தக்குழாய் அடைப்பு பாதிப்பு எனத் தெரிந்த பின் இன்ஜெக்சன் செலுத்தாமல், நேரடியாகத் அந்த இரத்தக் கட்டிகளை உறிந்து எடுத்து ரத்தம் மீண்டும் சரியாக இயங்க வழி அமைத்துக் கொடுத்து விடுவோம். உங்களுக்கு ஒரு நோயாளியை அறிமுகப்படுத்துகிறேன். ஒரு நோயாளி ரத்தக்கட்டு ஏற்பட்ட 4 மணி நேரம் கழித்து வந்தார். இவருடைய நாடித் துடிப்பானது 30 என கீழிறங்கியது. உள்ளே சென்று பார்த்தோமேயானால் வலது பக்கம் உள்ள தமனி முழுவதுமாக அடைபட்டிருந்தது. அங்கு இவருக்கு ஆஞ்சியோபிளாஸ்டி செய்த பின் அவருடைய நாடித் துடிப்பானது 70 என அங்கேயே அதிகமானது. அவர் இயல்பான நிலைக்கு திரும்பி விட்டார்.

ஒரு பிரச்சினை என்னவென்றால், இந்த பாதிப்பை சரி செய்யக் கூடிய அளவிலான மருத்துவ வசதிகளைக் கொண்ட மருத்துவமனை அருகில் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் இதை சரி செய்ய முடியும். எனவே நாம் செய்யவேண்டியதெல்லாம் இதற்கான மருந்தை எடுத்துக் கொண்டு மேற்கொண்டு சரிசெய்வதற்கு பெரிய மருத்துவ மனைகளுக்கு செல்லலாம். ஆனால், உடனடியாக அந்த மருந்தை செலுத்த வேண்டியது அவசியம். இதுதான் மாரடைப்புக்கான வைத்தியம்.

இப்போது மாரடைப்பு என்றால் என்ன? அதற்கு உடனடியாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் விளங்கிக் கொண்டோம். நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை இன்னொரு கேள்வி கேட்கிறேன்.

மாரடைப்பு வந்தால் எத்தனை பேர் சரியான நேரத்திற்கு மருத்துவமனைக்கு செல்கிறார்கள்? ஒரு நூறு பேருக்கு மாரடைப்பு வருகிறது என்றால், எத்தனை பேர் மருத்துவமனையை வந்தடைகிறார்கள் ? விடை வெறும் ஐந்து சதவீதம் பேர்தான். மீதி உள்ள 40 முதல் 50 சதவீதம் பேர் வழியிலேயே இறந்து விடுகிறார்கள். அல்லது வீட்டிலேயே இறந்து விடுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பதைப் பார்ப்போம்.

நமது உடலில் இருதயமானது எந்த பக்கம் உள்ளது என்று கேட்டால். அதிகம் பேர் இடது பக்கம் தான் உள்ளது என்று கூறுவார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. நமது இதயத்திற்கு நேரே மூன்று கோடை போட்டால், அது மூன்று பாகங்களாக பிரிக்கும். இடப்பக்கம் சிறிது அளவு அதிகமாக இருக்குமே தவிர வேறு எந்த மாற்றமும் இருக்காது. எனவே இருதயமானது எங்கு உள்ளது என்று கேட்டால், அது இடப்பக்கமும் அல்ல, வலப்பக்கமும் அல்ல மாறாக, நடுவில் உள்ளது என நாம் கூற வேண்டும்.

இதையே நாம் இங்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றால் இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் எல்லாம் அதன் அறிகுறிகளாக நடுப்பக்கத்தில் தான் வலியை ஏற்படுத்தும். ஆனால் மக்கள் இதை வாய்வு என தவறாக புரிந்து கொள்கின்றன.

மாரடைப்புக்கு உண்டான அறிகுறிகள் எவ்வாறு எல்லாம் தென்படலாம்? அனைவரும் கூறுவது போல வலியாக தென்படுவது வெறும் 50 சதவீதம்தான். பல பேருக்கு ஒரு இனம் புரியாத ஒரு உணர்வு இருக்கும். அதை வெளிப்படுத்த இயலாது. இன்னும் நிறைய பேருக்கு அந்த இடத்தில் அமுக்குவது போலவும், பிசைவது போலவும் இருக்கும். சில பேருக்கு வெறும் வாந்தி வரும் உணர்வாகத்தான் இருக்கும். சில பேருக்கு இதுவும் இருக்காது. உடலில் வியர்வை மட்டும் அதிகமாக வரும். இப்படி பல அறிகுறிகள் இருப்பதால் இப்படி வந்தால்தான் மாரடைப்பு என நாம் குறிப்பிட்டு கூற இயலாது. இந்த மாதிரி அறிகுறிகள் எங்கெல்லாம் தென்படலாம் என்றால். தாடைக்கு கீழும், வயிற்றுப் பகுதிக்கு மேலும் முன் அல்லது பின் எங்கேனும். இந்த அறிகுறிகள் தென்பட்டால், அது மாரடைப்புக்கானதாக இருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிக் கூறுவதால் பலபேருக்கு பல இடங்களில் வலியானது உண்டாகிக் கொண்டுதான் இருக்கும். அதுவெல்லாம் மாரடைப்புக்கான அறிகுறிதானா? என கேள்வி எழலாம். இதற்கு விடை இல்லை. காரணம் மாரடைப்புக்கான அறிகுறி என்றால் வலியானது குறைந்தது 15 அல்லது 20 நிமிடம் நம்மை வாட்டி எடுக்கும். இவ்வாறு இல்லாமல் ஒரு நிமிடம் அல்லது இரண்டு நிமிடத்தில் வலியானது வந்து செல்கிறது என்றால், அது மாரடைப்புக்கானதாக இருப்பதற்கான வாய்ப்பு குறைவு. மேலும் நாம் மேற்கூறிய இடங்களில் வலி ஏற்பட்டால் அனைவரும் அச்சப்படத் தேவையில்லை. யாருக்கெல்லாம் மாரடைப்புக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதோ, அவர்கள்தான் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு ஒருவர் புகை பிடிக்கிறார் என்றால், அவருக்கு நெஞ்சுக்கரிப்பு அதிக நேரம் ஒரு 40 நிமிடம் உள்ளது என்றால் அது மாரடைப்புக்கான அறிகுறியாக இருக்கலாம். அதை அவர் எளிதில் கடந்து போக இயலாது. எனது நண்பர் ஒருவர் ஓடும் போதும் அல்லது நடை பயணம் மேற்கொள்ளும்போதும் சிறிது ஏப்பம் வரும். ஒரு ஐந்து பத்து நிமிடம் உட்கார்ந்தால் சரியாகிவிடும் என கூறினார். நான் அவரை ஒரு ஈஸிஜி (பரிசோதனை) எடுக்க சொன்னேன். அவரால் அதை ஜீரணிக்க முடியவில்லை. எனவே சில நேரம் இவ்வாறு ஏப்பம் வருவது கூட மாரடைப்புக்கான அறிகுறியாக இருக்கலாம் அல்லது மாரடைப்புக்கான முன்னறிவிப்பாகவும் இருக்கலாம்.

ஏன் மாரடைப்பு வரும்போது 50 % பேர்தான் மருத்துவமனைக்கு வந்து சேர்கின்றனர்? இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. நாம் முன்னர் கூறியது போல கையை இறுகப் பற்றிக் கொள்ளும் போது கையானது ரத்த ஓட்டம் இல்லாமல் மஞ்சள் நிறத்தில் மாறுகிறது. அதேபோல் இருதயத்தில் நாம் முன்னர் விளக்கியது போல பெரும்பகுதியான தசைகள் இவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் போது உடனடியாக மரணம் சம்பவிக்கும். இருதயத்தின் தசைகள் பலவீனம் ஆகிய உடன் இந்த நிகழ்வானது நிகழும். நாங்கள் அதை வீ.டி.வி.எஃப் என கூறுவோம். இதுவே மைனர் அட்டாக். அதாவது சிறிய அளவிலான மாரடைப்பு.

நாம் மேலே விளக்கியது போல சிறிய அளவிலான தசைகள்தான் இருதயத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், இதயமானது சீராக இயங்காமல் வேகமாகத் துடித்து இரத்த ஓட்டத்தை கீழேயும் மேலேயும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல விடாமல் செய்து விடும். இதனாலும் மரணம் சம்பவிக்கும் வாய்ப்புகள் உண்டு. இதற்கு ஒரு காரணம். மாரடைப்பானது நிகழ்ந்து வீட்டிலேயே மரணிப்பது. இரண்டாவது காரணம் மாரடைப்புக்கான அறிகுறி என உணராமல், அதை தள்ளிப்போட்டு தள்ளிப்போட்டு பின் இறுதிக் கட்ட நிலையில் மருத்துவமனையை வந்து சேர்வது அல்லது வராமல் பாதியிலேயே மரணிப்பது.

அதிக பேர் கசாயம் குடிப்பது அல்லது உஷ்ணம் எனக் காரணம் காட்டி எலுமிச்சம் பழத்தை பிழிந்து குடிப்பது, என மருத்துவமனைக்கு வராமல் காலத்தை கடத்துகின்றனர். இதற்காகத்தான் இந்தப் பதிவில் நாம் சுட்டிக்காட்டுகிறோம். இருதயமானது நடுவில் உள்ளது. இடப்பக்கமும் வலப்பக்கமும் அல்ல. மாரடைப்புக்கான அறிகுறி என்றால் அது நடுவில் ஏற்படும். அப்படியினில் எல்லோரும் பயந்து கொண்டுதான் இருக்க வேண்டுமா என்று கேட்டால், இல்லை என்பதுதான் பதில்.

மாரடைப்பானது அனைவருக்கும் வரும்தான். ஆனால், எல்லோருக்கும் வரும் எனக் கூற முடியாது. மாரடைப்பானது யாருக்கெல்லாம் வரும் என நாம் ஒரு லிஸ்ட் போடுவோமா?

முதலில் பீடி அல்லது சிகரெட் புகைப்பவர்களுக்கு. இதில் புகையிலையை வாயில் வைத்து மெல்பவர்கள் அல்லது வேறு விதமாக பயன்படுத்துபவர்கள் எல்லோரும் அடக்கம்.

இரண்டாவது, சர்க்கரை நோய் உள்ளவர்கள்.

மூன்றாவது, கொலஸ்ட்ரால் அதிகம் உள்ளவர்கள்.

நான்காவது, அதிக ரத்தக் கொதிப்பு உள்ளவர்கள்.

அடுத்தது, வீட்டில் ரத்த உறவுகள் அண்ணன், தம்பி, அப்பா அல்லது தாய் யாருக்கேனும் மாரடைப்பு வந்தது என்றால் அது நமக்கும் வரும் வாய்ப்பு அதிகம்.

அடுத்தது உடல் பருமன் அதிகம் உள்ள நண்பர்களும், அடிக்கடி டென்சன் ஆகும் நபர்களுக்கும், உடல் உழைப்பு மிகவும் குறைவாக உள்ள நபர்களுக்கும் மாரடைப்பு வரும் வாய்ப்புகள் உள்ளது.

நாம் மேலே கூறிய காரணங்களைத் தகர்த்தால், அதாவது சர்க்கரை நோயாளி என்றால் சரியான உணவுமுறை எடுத்துக்கொள்வது, நடை பயணம் செல்வது அதேபோல், உடல் உழைப்பு இல்லாதவர்கள் என்றால் உடல் உழைப்பில் ஈடுபடுவது, அதிக நேரம் ஒரே இடத்தில் இருப்பதைத் தவிர்ப்பது போன்ற காரணங்களால் நாம் மாரடைப்பு ஏற்படும் அபாயத்தை தவிர்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், நாம் சிரமம் ஏற்படாமல் இருக்க, அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று ஒரு ஈசிஜி அதாவது பரிசோதனை செய்து கொள்வது நல்லது. நாம் மருத்துவமனைக்குச் சென்றால், அவர்கள் ஈசிஜி பிறகு பிளட் டெஸ்ட் ஏதேனும் எடுப்பார்கள். அதனால் நமக்கு சிறிது செலவு ஏற்படத்தான் செய்யும். இந்தச் செலவுக்கு பயந்து, நாம் வீட்டிலேயே இருந்தோமானால், அது நம் உயிருக்கான விலையைத் தந்துவிடும். எனவே நாம் செய்ய வேண்டியது இரண்டுதான். மாரடைப்பு வருவதற்கான காரணங்கள் நம்மிடம் இருக்கும் என்றால் அந்த காரணங்களைக் கலைவது.

இரண்டாவது, ஏதேனும் சிறிய அறிகுறி தென்பட்டாலும், நாம் அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று, அதற்கான பரிசோதனைகளைச் செய்து கொள்வது. நாம் இந்த விஷயத்தில் மிகவும் றிஸ்க் எடுப்பது சரியானதல்ல.

. நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
30 - 05 - 1956

மறைவு
17 - 05 - 2022



எமது சங்கத்தின் அங்கத்தவரும், யாழ்ப்பாணம் (கூட்டாதெரு)
ஐங்கரன் பேக்கரி உரிமையாளருமாகிய

## அமரர் இராசா பொன்குமார்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

பிறந்தவரெல்லாம் இறப்பது என்பது
இறைவனின் நியதி
மாண்டவர் மீண்டு வரார்
என்றும் படைத்தவனின் விதி
ஆனாலும் மனம் ஆறுவதில்லை
நெஞ்சமோ தேறுவதில்லை
காலவோட்டத்தில் எல்லாம்
கனவாகும் அதுவரை
நெஞ்சமே நீ அமைதி கொள்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
30
05
1956

மறைவு
16
05
2022



வேலணை மேற்கு, முழங்காவில், கலட்டி ஆகிய இடங்களை
வசிப்பிடமாக கொண்ட

## அமரர்
## இராசா பொன்குமார்

நேற்று வரை
எம்மோடு இருந்தாய்
எங்களில் ஒருவராய்
அன்போடு வாழ்ந்தாய்
காலமெல்லாம் எமைக்
காத்திருப்பாய் என்றிருக்க
கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணோடு நீ போனாய்
ஆற்றொண்ணாத் துயரமது
மாற்றாவி ஓடுதய்யா!
உன் ஆத்மா சாந்திபெற
உள்ளமதால் வேண்டுகின்றோம்.


ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பிரிவால் துயருறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
30.05.1956

இறப்பு
16.05.2022

அமரர் இராசா பொன்குமார்

அன்பாய் எம்மோடு பண்பாய் பேசிடுவீர்
துன்பம் துயரம் தாங்கி
அன்புடனே அணைத்திடுவீர்!
ஊர் போற்ற உத்தமனாய் வாழ்ந்தீர்!
இன்று ஊர் விட்டு பார் விட்டு
பறந்தெங்கு சென்றீர்?
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!

இங்ஙனம்
நண்பர்கள், உறவினர்கள்

# இதய அஞ்சலி



எம் நெஞ்சமதை கலக்க வைத்து கண்களில் கண்ணீர்
கண்ணிமைப் பொழுதினில் காலனவன் கவர்ந்து கொண்டான்
இது கனவாக இருக்காதா என ஏங்கியது எங்கள் மனம்
களங்கமில்லாத கவலையில்லாத
காத்திருப்புக்களோடும் ஏக்கங்களோடும்
கணநேரத்தில் வாழ்க்கைப் பயணத்தை
கடந்த செய்தி எம் நெஞ்சமதை பிளந்ததே.....
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர்
## இராசா பொன்குமார்

மண்ணில் 30.05.1956
விண்ணில் 16.05.2022

பிரிவால் துயருறும்
வரணி சுட்டிபுரம் கண்ணகி
அம்மன் ஆலய நிர்வாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அன்னையின் மடியில்  
ஆண்டவன் அடியில்

08.05.1956 — 16.05.2022

யாழ் பல்கலைக்கழக நண்பன்  
ஜெயக்குமாரது மனைவியின்  
அன்புத்தந்தையார் இராசா பொன்குமார்.

கண்ணீர்ப் பூக்கள்!

கடவுளின் பாதத்துக் காணிக்கை பூவொன்று  
காரணமாக புவிமிசை வந்து  
திருமுறைச்செல்வியின் கரத்தினைப் பிடித்து  
முறையோடு மூன்று முத்துக்களை பிரசவித்து  
அறநெறி தவறாது  
சமய நெறிமுறையோடு வாழ்ந்து  
நெடிய தன் நிலமிசைக் கடமைகள் முடித்து  
படைத்தவன் தாள்களை - மீண்டும்  
பற்றியே சென்ற  
அமரர் இராசா பொன்குமாரின் இழப்பினால்  
இருபெருந்துயரில் வாடும்  
அருமை நண்பன் ஜெயக்குமாரின் மனையாள்  
பபிலாவிற்கும் அவர் தம் குடும்பத்தாரிற்கும்  
எம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு  
அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி  
இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தோள்கொடுக்கும் தோழமை  
பிரித்தானியா

## கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 1956 - 05 - 30 | 2022 - 05 - 16 |

அமரர்

### இராசா பொன்குமார்

இதயத்தின் அறையில் உயிர்பிரிந்து போனது  
சேர்ந்திருந்த உறவு ஒன்று இன்று முடிந்து போனது  
காத்திருந்த உறவு கண்விழித்துப் பார்த்திருக்க  
பார்த்திருந்த மரணம் பரிதவிக்கச் செய்தது  
பேச்சிழந்து புலம்புகின்றோம்- புலம்பியொரு  
வார்த்தை உன்னிடத்தில் கேட்கின்றோம்.  
கண்ணீருக்கு பஞ்சமில்லை- காத்திருக்க  
உயிரில்லை- இங்கே உறவிருக்க  
நீங்கள் அருகில் இல்லை- என்றும் உங்கள்  
நினைவோடு நாமும் வாழ்வோம்...

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச விருட்சம்

இராமலிங்கம் + தையல்முத்து

*விஜயானந்தன்
*குலசிங்கம்+ கமலாம்பிகை
சீதாதேவி+ இராமகிருஷ்ணபிரசாத்
கமலாதேவி + கௌரிசங்கர்
*இரஞ்சிதாதேவி + தர்மராஜா
**பொன்குமார்**
ஸ்ரீக்குமார் + சந்திரகலா

சண்முகநாதன் + நவரத்தினம்மா

**திருமுறைச்செல்வி**
திருநாதன் + கௌரி *சக்தி
சிவநாதன் + விஜயலஷ்மி
*நந்தினி
மாலினி + மகேந்திரன்
வாசுகி + இராசேந்திரன்
யோகநாதன்
பவானி + ஸ்ரீதரன்

பொன்குமார் + திருமுறைச்செல்வி

மகிந்தராஜா
+
கஜலக்ஷி

பபிலா
+
ஜெயக்குமார்
கோகுலநாத்
நிருராஜ்
கிஷான்

அகிலா
+
சிவச்சந்திரன்
அக்ஷிகா
கிஷானிகா

* அமரர்களைக் குறிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



எம் குடும்பத்தின் ஒளி விளக்காகி
எமக்கெல்லாம் ஒளியூட்டி
வாழ்வில் உயர்வாக்கி
உன்னதமாய் வாழ வைத்து
உதாரணமாய் வாழ்ந்திருந்து விண்ணுலகம் ஏகிவிட்ட
எங்கள் அன்புத் தெய்வத்தின்
துயரநிகழ்விலும் தொடாந்து வந்த நாட்களிலும்
ஆறுதல் தந்தவர்களுக்கும் அன்பு செய்தவர்களுக்கும்
துன்ப நிமிடங்களில் துணையாய் நின்றவர்களுக்கும்
உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து
தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோர்க்கும்
கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோர்க்கும்
மற்றும் மலர் வளயம் வைத்தவர்களுக்கும்,
சுடுகாடுவரை நிலபாவாடை விரித்தவர்களுக்கும்,
சுமந்து சென்றவர்களுக்கும்,
மற்றும் அஞ்சலி உரை நிகழ்த்தியோர்கும்
மற்றும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில்
கலந்து கொண்டவர்களுக்கும் குருமார்க்கும்
இம் மலரினை அச்சிட்டு உதவிய
சத்தியா பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும்
மற்றும் கலந்து கொண்ட ஏனைய சகலருக்கும்
எங்கள் இதயம் கனிந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org